142

For Free Distribution

# BRITISH RULE IN INDIA

# இந்தியாவில் ஆங்கிலேய ஆதிபத்தியம்

BY

S. SRINIVASA VENCATACHARI
KUMBAKONAM

PART II—(*Tamil*)

PRINTED AT
THE GUARDIAN PRESS
MADRAS
1915

# இந்தியாவில் ஆங்கிலேய அரசாக்ஷி

ஆங்கிலேயர்கள் இத்தேசத்தில் சற்றேறக் குறைய 150-வருஷகாலமாக அரசு புரிந்து வருகிறார்கள். அவர்கள் அரசாட்சியில் நமது தேசத்தாருக்கு அருமையான பற்பல நன்மைகள் கிடைத்திருக்கின்றன. அவைகளை நாம் விவரிப்பதற்கு முன் இத்தேசத்தில் முந்தி அமைந்துள்ள சுதேசராஜரீக நிலைமையைச் சற்றுச் சுருக்கிச்சொல்லுவோம்.

முந்திய பரிபாலனங்களில் தேசம் பலவாறுகப் பிரிந்து ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு அரசரின் ஆளுகையில் இருந்துவந்தது. அவர்கள் மனம்போன வழியே அரசாக்ஷி நடத்தப்பட்டு வந்தது. அவ்வரசர்கள் நீதியைவிட்டு வழுவி நடந்தால், அவர்களைத் தடுக்கக்கூடிய சட்டமாவது ஜனக்கட்டுப்பாடாவது இருந்ததாக நினைக்க இடமில்லை. அதிகாரிகள் இலஞ்சம் வாங்குந் தன்மையை வெகுவாய் அனுசரித்து வந்தார்கள். நியாய பரிபாலனம் முற்

923.142



றிலும் சரியாய் இருந்ததாகத் தோன்றவில்லை. அரசர்களுக்குள் ஒற்றுமைக்குறைவு இருந்தமையால் தேசத்தில் சமாதானமும் பரஸ்பர நல்லுணர்ச்சியும் அரிதாக இருந்தன. இந்த நிலைமையில் அன்னிய தேச அரசர்கள் இந்தத் தேசத்தில் படை எடுப்பது சகஜமாயிருந்தது.

இந்த ஸ்திதியில் ஆங்கிலேய அரசாட்சி இத்தேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அது சுவல்ப காலத்திற்குள் இத்தேசத்தில் நிலைபெற்றது. தேசத்தின் பற்பல பாகங்களும் ஒன்றாகி ஆங்கிலேய ஆதிபத்தியத்திற்கு உள்பட்டன. அது முதல் இராஜாங்கத்தார் இத்தேசத்தின் நன்மையைக் கருதி நமக்குப் பற்பல் நன்மைகளை அளித்திருக்கிறார்கள். இராஜரீகத்தில் தேர்ந்த ஆங்கிலேய நிபுணர்கள் நமதுதேசத்தின் இராஜாங்க நிர்வாகத்தை வகித்து வருகிறார்கள்.

ஆயிரக்கணக்கான யுத்த வீரர்களும், போலீஸ் சைன்னியங்களும், நமது சொத்துக்களையும், நம்மையும் பாதுகாத்து வருகிறார்கள். நமக்குள்ள நியாயங்களைத் தீர்த்துக் கொடுப்பதற்காக இராஜாங்கத்தார் தேசத்தின் பற்பல பாகங்களில் நியாயஸ் தலங்களையும், நியாயாதிபதிகளையும், ஏற்படுத்தியிருக்கிறார்கள். நமது தேக சௌக்

கியத்தையும் சுகாதாரத்தையும் கவனிப்பதற்காக வைத்திய நிபுணர்களையும், வைத்திய சாலைகளையும், அமைத்திருக்கிறார்கள். நடைப்புப்பாதைகளும், பாசனங்களும், அதிகாரிகளின் விசேஷ கவனத்தைப்பெற்று வருகின்றன. ரெயில்களும், தந்திதொடர்களும், நமது சௌகரியங்களையும் நாகரீகத்தையும் விருத்திசெய்யக் காரணமாய் ஏற்பட்டன. பாடசாலைகளும், கலாசாலைகளும், வெகுவாய் ஏற்படவே நமக்கு உயர்தரப்படிப்பும் நாகரிகமும் உண்டாய்விட்டன. நமது குறைகளைச்சட்டப்படி அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டி அவைகளைப் பரிகரித்துக்கொள்ளும் வகைதேடக் கூடிய சுதந்திரங்கள் நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. ஜனங்களின் குறைகளை நியாயமாயும் சட்டத்தின் அமைப்பிற்கும் கருத்திற்கும் இணங்கி எடுத்துக்காட்டும் சுயேச்சை, பத்திரிகைகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தியர்களை இராஜரீகத்தில் பயிற்சி செய்ய எண்ணி நமது கவர்ன்மெண்டார் நமக்கு ஸ்தல சுவய அரசாக்ஷி என்று சொல்லப்படும் முனிஸிபல் பரிபாலன சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இராஜாங்கத்தாருக்கு ஜாதிபேதம் மதபேதமில்லை. அவ்வரசாட்சியில்.

ஒவ்வொருவரும் தன் தன் மதத்தைப் பயமின்றி அனுசரிக்கக்கூடும். இந்தியர்களில் அநேகருக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டுள. சட்ட நிரூபண சபைகளில் நமது தேசப் பிரதி நிதிகள் பலர் மெம்பர் ஸ்தானங்களை வகித்து வருகிறார்கள். சட்ட நிர்மாண காலங்களில் கவர்ன்மெண்டார் இத்தேசப்பொது அபிப்பிராய நிலைமையைக் கலந்து கொள்வதுண்டு. இத்தேசத்தில் வழங்கிவந்த சில கொடும் அனுஷ்டானங்கள் நின்றுவிட்டன. ஆகவே ஆங்கிலேய பரிபாலனத்தில் பிரஜைகளுக்கு சமாதானம் மேலிட்டு நாகரிகமும் இராஜ்ய நிர்வாகத்தில் ஊக்கமும் பயிற்சியும் உண்டாயிருக்கின்றன.

நமது தேசத்தை நன்னிலைமைக்குக் கொண்டு வருவதான உன்னத கைங்கரியத்தை ஒப்புக் கொண்டு நடத்திவரும் ஆங்கிலேய உத்தமர்கள் உலகில் விசேஷ கீர்த்தியையும், பெருமையையும், பெற்றுவிட்டார்கள். அவ்வரசாட்சியின் கீழ்தான் நமது தேசம் உத்தாரணம் அடையக் கூடும். ஆகையால் மாக்ஷிமைதங்கிய ஆங்கிலேய அரசாக்ஷி நீடூழிகாலம் நிலைபெற்று வாழவும் நாம் கடவுளைத் திருகரண சுத்தியாய் பிரார்த்திக்கவேண்டும்.

# இந்திய இராஜாங்கச் சீர்திருத்தங்கள்

நமது கவர்ன்மெண்டார் சொல்பகாலத்துக்கு முந்தி சில இராஜாங்கச் சீர்திருத்தங்களைச் செய்தார்கள். அவைகள் ஆங்கிலேய அரசிறைக்கு விசேஷப் பிரதிஷ்டையை விளைவிக்கக் காரணமாயிருக்கின்றன. அச்சீர்திருத்தங்கள் நமது தேசத்தில் அமைந்துள்ள சிறு கிராம யூனியன் முதல் இராஜப்பிரதிநிதி சட்ட நிரூபண சபைவரையில் ஒவ்வொரு முக்கிய அமைப்பையும் சீர்திருத்திப் பலப்படுத்தியிருக்கின்றன. மாகாணசட்ட நிரூபண சபையின் அபிவிர்த்தியும் அவைகளின் அதிகாரப்பெருக்குமே சீர்திருத்தங்களில் முக்கியமாயுள்ளவைகள். அந்நூதன ஏற்பாட்டில் சட்ட நிரூபணசபை மெம்பர்களின் சங்கியை அதிகரித்து ஜனங்களுக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் சுதந்தரமும் கொடுபட்டிருக்கிறது. ஆகையால் புதுச் சபையில் பற்பல ஜாதிகளிலிருந்தும் தொழில்களிலிருந்தும் பிரதிநிதிகள் பொருக்கி எடுபட்டிருப்பதுடன் கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் அமர்ந்திராத மெம்பர்களின் சங்கியையும் அதிகரித்திருக்கிறது.

இராஜப்பிரதிநிதி சட்டநிரூபண சபையின் அமைப்பும் முக்கியமான சில மாறுதல்களை அடைந்திருக்கிறது. சட்ட சபைகளில் கேள்விகளைக் கேள்க்கும் அம்சத்திலும் இராஜாங்க விஷயங்கள் திட்ட ஜாப்தா இவைகளைப்பற்றிச் சபையில் வியவகரிக்கும் அம்சங்களிலும் மெம்பர்களுக்கு முக்கியமான சில சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளால் ஜனப்பிரதிநிதிகளுக்கு இராஜ்யபாரத்தில் விசேஷப் பொருப்பு ஏற்பட்டுள்ளது.

இத்தேச இராஜ்ய நிர்வாகத்தை விசே கியாதியுடன் வகிக்கப்பெற்ற ரிப்பன் பிரபு அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு தற்காலம் நடைபெற்றுவரும் தேசச் சுய அரசாக்ஷி (Local Self-Government) வரவர விர்த்தி அடைந்து ஜனங்களுக்கு இராஜரீகப் பயிற்சியை மேல்மேலும் புகட்டிவருகிறது.

இச்சீர் திருத்தங்கள் ஸாமான்யமானவைகள் அல்ல. அவைகள் நமது தேச சரித்திரத்தில் முக்கியமாயுள்ள ஸம்பவங்கள். ஆயினும் அச்சுதந்தரங்களை நம்தேசத்தார் அடைந்திருப்பதில் அவர்களுக்கு விசேஷப்பொறுப்பும் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலைமையில் புதுச்சுதந்திரங்

கள் நம் தேசத்தாருக்கு ஸபலமாக முடிவது நம் தேசத்தாரைப் பொருத்தாகவே இருக்கிறது.

இதுவரையில் இத்தேசத்தாருக்கு இராஜ்ய நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கும் பயிற்சி ஏட்டுச் சுரைக்காய் என்றே சொல்லக்கூடும். குறை கூறுவதே நம்தேசத்தார் இதுவரையில் இராஜரீகத்தில் செய்துவந்த வேலை. இராஜ்ய நிர்வாகத்திற்குச் சாதனமாயுள்ள பரிபாலனத் திறமை இந்தியர்களுக்கு இனித்தான் அனுஷ்டான ரீதியில் ஏற்படவேண்டும். ஆகையால் நமக்கு ஏற்பட்டிருக்கும் புது நிர்வாகங்களை நாம் திறமையுடன் வகிக்கவேண்டுமானால் நாம் ஐக்கிய பத்தியத்தையும் இரஜவிசுவாஸத்தையும் பொருமையையும் பரஸ்பர நல்லுணர்ச்சியையும் அன்பையும் விஷயபூர்வகமாய் உள்கொள்ளவேண்டும். நம்மைப் பரிபாலித்துவரும் ஆங்கிலேய இராஜாங்கத்தாரும் நம் புது நிர்வாகங்களைச் சரிவர வகிக்குமாறு நமக்கு உதவிபுரிவார்களென்பதில் தடையில்லை. அவர்கள் நம் தேசாபிவிர்த்தியையே கருதி நம்மை அன்பு ஆதரவுடன் இதுகாறும் ஆண்டுவந்திருக்கிறார்கள். 30-கோடி ஜனசங்கியையுடைய இந்திய

மகாஜனங்களை உத்தாரணஞ்செய்து நல்நிலமைக்குக் கொண்டுவருவதான கைங்கரியம் கடவுளால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவ்வுத்தம கைங்கரியத்தை அவ்வண்ணமே எண்ணி ஆங்கிலேயர் இத்தேசத்தில் இராஜ்யபரிபாலனம் செய்துவந்திருக்கிறார்கள். இனியும் அவர்கள் அவ்வண்ணமே நமக்கு உதவிபுரிந்து கடவுடைய அருளை மேன்மேலும் பெற்று உலகில் விசேஷப் பெருமையை அடைவார்களென்று நான் சொல்லத்துணிகிறேன்.

---

## ஆங்கிலேய ஆதிபத்தியம்

இந்தியா தேசம் ஆங்கிலேய ஆதிபத்தியத்திற்குள்ளானதற்கு முந்தி வெகு பரிதாப நிலமையில் இருந்தது. தேசத்தின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு சிறு அரசரின் ஆளுகையிலிருந்தது. அவ்வரசர்கள் பொதுவாய்க் கொடுங்கோன் மன்னர்களாகவே இருந்தார்கள். அரசரின் மனம் போனவழியே இராஜ்ய பரிபாலனம் நடத்தப்பட்டுவந்தது. பொது அபிப்பிராய நிலையை அவ்வரசர்கள் அனுசரித்து நடந்ததில்லை. ஜாதிக்கு ஒரு நியாயமும் வகைக்கு ஒரு நீதியு

மாக நியாய பரிபாலனம் நடைபெற்றுவந்தது. பிரஜைகளின் சொத்துக்களும் உயிரும் சரிவர பாதுகாக்கப்பட்டதாகவும் சொல்லக்கூடவில்லை. வரிகள் கடுமையாக விதிக்கப்பட்டுவந்ததாகச் சொல்லப்படுகிறது. அவைகளை வசூலிக்கும் விஷயத்தில் வெகு அநீதங்கள் அவ்வரசர்களால் செய்யப்பட்டதாகச் சரித்திரமூலமாம் அறிகிறோம். சககமனம் சிசுவதை முதலிய சில கொடும் ஆசரணைகளும் அக்காலங்களில் அனுஷ்டிக்கப்பட்டுவந்தன. ஜனங்களுக்குள் சமாதானக் குறைவு ஏற்பட்டும் அரசர்களுக்குள் அடிக்கடி குறுக்குப் பகைகள் நேர்ந்துவந்தன. மதபேதத்தைமுன்னிட்டு செய்யப்பட்ட கொடுமைகள் பல. உள்நாட்டு வெளிநாட்டுக் கலகங்களால் உண்டான தீங்குகள் பல. ஆங்கிலேய ஆதிபத்தியம் இத்தேசத்தில் நிலைபெற்ற பின்னர் இத்தேச சரித்திரம் முற்றிலும் மாறிவிட்டது. குறுக்குப் பகைகளும் கலாபங்களும் ஒழிந்து இத்தேசத்தார் நிரந்தர சமாதானத்தை அவ்வாதிபத்தியத்தில் அடைந்துவிட்டார்கள். ஆங்கிலேயர்கள் இத்தேச பரிபாலனத்தை பரோபகார சிந்தையுடன் காருண்யத்தைப் பாராட்டி உன்னத கைங்கரியமாக எண்ணி நடாத்திவருகிறார்கள்.

இந்தியர்களுடைய க்ஷேமாபிவிர்த்தியே தங்களு டைய புருஷார்த்தம் என்று எண்ணி நமது மகாசக்கிரவர்த்தி அவர்கள் அரசுபுரிந்து வருகி றார்கள். ஆங்கிலேய ஆதிபத்தியத்திற்குள்பட்ட மற்ற தேசங்களைப்போலவே இந்திய மகாதேச மும் பற்பல அருமையான சுதந்திரங்களை அனு பவித்து வருகிறது. இத்தேசத்தாரைக் கலந்து கொண்டும் பொது அபிப்பிராய நிலையைக் கூடிய மட்டில் அனுசரித்துமே இராஜ்ய நிர்வாகம் நடத் தப்பட்டு வருகிறது. சட்ட நிர்மாணத்திலும் நிர்வாகத்திலும் இத்தேசத்தார்கள் வேகுவாய்க் கலந்திருக்கிறார்கள். உன்னதமான பற்பல நிர் வாகங்களும் அதிகாரங்களும் இத்தேசத்தாரில் பலருக்குக் கொடுபட்டுள. நியாய பரிபாலனம் பக்ஷபாதமன்றியும் மனச்சாக்ஷிக்கு விரோதமின் றியும் நடைபெற்று வருகிறது. இத்தேசத்தா ருக்கு இராஜ்ய நிர்வாகப்பயிற்சியும் அவர்க ளுடைய சக்திக்கும் தன்மைக்கும் ஒத்த அளவு கொடுபட்டுவருகிறது. நட்பொருளும் ஆயுளும் நம்முடையதென்று நாம் பயமின்றி எண்ணிச் சுகமாயிருக்கிறோம். நம் தேசத்தின் அபிவிர்த் திக்குக் காரணமான பல நவீன அமைப்புகள் ஆங்கிலேய அரசாக்ஷியில் ஏற்பட்டுள. உயர்ந்த

கல்வியும் நவீன நாகரீகமும் நமக்கு ஊட்டப் படுகின்றன. உலகில் வழங்கிவரும் பல வியவ காரங்களில் நாமும் புகுந்து சம்மந்தப்பட்டு வருகிறோம். பல கொடும் அனுஷ்டானங்கள் நிருத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே நம்தேசம் நாகரீகத்திலும் ஐசுவரியத்திலும் கல்வியிலும் விர்த்தியடைந்து விசேஷ நன்னிலைமைக்கு வந்துகொண்டு இருக்கிறது. அதற்கு முக்கிய காரணமாயுள்ள நமது காருண்ய ஆங்கிலேய இராஜாங்கத்தாரை நாம் எக்காலத்திலும் மறக்கலாகாது. இத்தேசம் உத்தாரணம் அடைவது அவர்களைப் பொருத்ததாகவே இருக்கிறது. இத்தன்மையை மறந்து நம் தேசத்தாரில் சிலர் வெடிகுண்டுகளைப்போட்டும் கொள்ளையடித்தும் ஆங்கிலேயர்களில் சிலரை கொலைபுரிந்தும் நடப்பது மகாபாதகமல்லவா? அப்படிச் செய்பவர்கள் தேசத்துரோகிகள் அல்லவா? அவர்களுடைய பாதகச் செய்கைகளைக் கடவுள் சிறுதும் சகிப்பாரா? அவர்கள் தங்கள் செய்கையால் தங்களையும் கெடுத்து தேசத்தையும் க்ஷீணகதியில் கொண்டுவர எத்தனிக்கிறார்களே யன்றி வேறுண்டோ? ஆங்கிலேய ஆதிபத்தியம் நீடூழிகாலம் நிலைபெற்றால் அன்றோ இத்தேசத்திற்கு க்ஷேமமுண்டு. ஆகை

யால் இந்துக்களாகிய நாம் அனைவரும் ஒன்று கூடி இராஜத்துரோகம் என்ற மகா பாதகத்தை இத்தேசத்திலிருந்து வேரோடு பிடுங்கிவிட்டு, தேசோபகாரிகளான ஆங்கிலேயருடன் அனுகூலத்தன்மையோடு ஒத்துவாழ்வோமாக!

---

## இந்தியாவில் பிரிடிஷ் துரைத்தனம்

இந்தியா தேசத்தில் ஆங்கிலேயர்கள் அரசாளுவதினால் ஆனபலன் என்னவென்று தற்காலம் சிலர் சங்கிக்கிறார்கள். அப்படிச் சங்கிப்பது சரியன்று.

பாரத வர்ஷமான இந்த தேசத்தில் மனுமாந்தாதிகள் செங்கோல் செலுத்தினார்கள் என்றும், ராமர் ராஜ்ய பரிபாலனம் செய்தார் என்றுமுள்ள புராண கதைகளைவிட்டுத் தேசச்சரித்திரத்தையும் அக்காலத்தில் உள்ள நம்தேச நிலையையும் சற்றுக் கவனிப்போம். அங்க வங்க கலிங்க காச்மீரம் ஆதியான பற்பல சிற்றரசர்களால் அங்கங்கே ஆளப்பட்டு அரசன் இட்டதே சட்டமாய்க் குடிகள் ராஜாங்கமென்பதே இன்னதென்று அறியாமல் குறுபகைகளாலும் அரசர்கள் ஒருவருக்கொருவர் உண்டான

சண்டைகளாலும் நம்முடைய பிராணன் நம்முடையதென்று சொல்லமுடியாத நிலைமையில் அப்போது நம்தேசம் இருந்தது. கற்றறியாத மூடர்களின் கணக்கெடுப்பாரில்லை. பின்னுல், மதத்வேஷங்கள் பிரபலமாய், கோயிலை இடிப்பதும், கழுத்தையரிப்பதும், கழுவேற்றுவதும், கல்காணத்தில் ஆட்டுவதுமான ஸம்பவங்கள் அடிக்கடி நேரிடலாயின. நாட்டு வளம் ஒன்றும் அறியாது கூபத்திலேயே பிறந்து வளர்ந்து இறந்து கிடக்கும் கூர்மத்தைப்போல் அயல் நாட்டார்கள் அபிவிருத்திசெய்யும் சாஸ்திர முறைகளில் எதேனுமறிந்து நாமும் நன்மையடைந்தோமில்லை. மதாசாரங்களில் முன்னோர்கள் மொழிந்த முறைகள் தப்பி திகைத்துக்கிடந்தோம்.

இப்படியிருக்க ஆங்லேயர்கள் அரசாளவந்த பிறகு குடிகளுக்கு உண்டான நன்மைகளைக் கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம். "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை" என்று யாவருக்கும் இன்றியமையாத கல்வியைக் கற்பிக்க வேண்டுமென்ற அவாவினுல் கவர்ன்மெண்டார் அனேகக் கல்விச்சாலைகளை ஏற்படுத்தித் தற்காலத்திற்குரிய கல்வியொழுக்கங்களைக் கற்

பித்துவருகிறார்கள். எல்லா நன்மைகளுக்கும் விருத்திக்கும் மூலகாரணமாயுள்ளது கல்வியாயிருக்க அக்கல்வி கற்பித்தார் காருண்யத்தை நாம் எப்போதும் மறக்கலாகாது.

ரோட்டுகள், வாய்க்கால்கள், இருப்புப் பாதைகள், தபால் தந்திமுதலான போக்கு வரவுக்குரிய சாதனங்களை உண்டாக்கிக் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் அநேக விதங்களால் விருத்திசெய்திருக்கிறார்கள்.

விவசாயத்திற்கென்றே வருஷத்தில் எத்தனையோ லக்ஷங்கள் செலவாகின்றன. நியாயஸ்தானங்களையும் நியாயாதிபதிகளையும் ஏற்படுத்தி மதபேதமின்றி உடல் பொருள்களை ஒக்கப் பாதுகாத்து வருகிறார்கள்.

அன்றியும், ராஜாங்க முறையென்பது இன்னதென்று அறியாமல் இருந்த நமக்கு அம்முறைகளை அறிவித்து நம்மையும் ராஜ்ய பரிபாலன விஷயங்களில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நியாயசபைகளில் நாம் நியாயம் செலுத்துகிறோம். சட்ட ஸபைகளிற் புகுந்து குற்றங் குறைகளையும், நம் இஷ்டங்களையும், கஷ்ட நிஷ்டூரங்களையும் எடுத்துச் சொல்லுகிறோம். (Fxecutive council, Secretary of

State's council) என்கிற சபைகளில் இருந்து அதிகாரம் செலுத்துகிறோம். அன்றியும் அந்தந்த ஜில்லா தாலூகாவிலுண்டாகும் ஸ்தல வியவஹாரங்களை நாமே பார்த்துப் பரிசீலனம் பண்ணும்படி முனிஸிபாலிடிகளையும் போர்டுகளையும் உண்டாக்கி யிருக்கிறார்கள்.

ஹிந்துக்கள், மஹம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய நானாஜாதிகளும் ஒவ்வொரு ஜாதிக்குள்ளும் அநேக பிரிவுகளும் உண்டாய் ஐக்கியம் என்பதே அறியாதிருந்த நமக்கு அந்த அறிவை உண்டாக்கிக் கொண்டுவருகிறார்கள். இந்த க்ஷேமங்களெல்லாம் நமக்கு பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இன்னும் பலகாலம் இருந்தால்தான் சரிவரக்கிடைக்கும் என்பதை நாம் நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். இத்தனைகாலம் செய்த நன்மைகள் அநேக மிருந்தபோதிலும் அவைகளை நாளடைவிலே நம்முடைய யோக்கியதையினாலே நாம் அடையவேண்டும்.

இத்தனையும் மறந்து நம்மில் சிலர் அறிவில்லாமல் ராஜத் துரோகமாகிற மகா பாதகத்தைச் செய்யத் துணிந்தார்களே! இதென்ன விபரீதம்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

THE GUARDIAN PRESS, MADRAS